Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ.1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

படர்:- 1 யாழ்ப்பாணம் வியாழ ஆடி சித்திரை மீ 25 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபான் பிறை 28 (08-05-1986) UTHAYAM : A LIVELY TAMIL DAILY கிழமை:146

வெளிநாட்டுப் பிரயாணம்
- தரித ஒழுங்கான
- சகலகட்டண விமானச் சீட்டுகள்
- Confirmations. Reconfirmations
- பாஸ்போர்ட், விசா, பொண்ட்

MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

சர்வதேச ரெலிபோன் சேவை
பாதுகாப்பான இடம்
தங்க அறை வசதி
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)

MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

## கொழும்பில்
# மதுதிய தந்திக் கந்தோரில் பெரும் குண்டு வெடிப்பு!

## இனப்பிரச்சினை:
# பிரதமர் ராஜீவின் முக்கிய முடிவு வார இறுதியில்

புதுடில்லி, மே 7

இன பிரச்சினைபற்றிய மாவட்ட இலங்கை அரசு எழுத்திலே கொடுத்த புதிய யோசனைகளை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி, வார இறுதியில் முக்கிய முடிவுகளை மேற்கொள்வார்.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியக் குழுவுக்கு நன்மை வகிக்கத்தக்க

### லொறி மீதான தாக்குதலில் இறந்த மூவர்

நல்லூர், மே 8

பண்ணையில் லொறிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் மரணமானவர்களின் விபர விவரம் வருமாறு; கட்டையர் சிவபாதசுந்தரம் (வயது 34) இவர் கொக்குவிலைச் சேர்ந்தவர். 'சரிந்திரன்' என்ற இந்த லொறியில் உதவியாளரும் இவரே.

இவருக்கு 5 பிள்ளைகள் உண்டு. இவரை 'குஞ்சு' எனவும் அழைப்பர். சந்தையர், இவர் ஆசிரியர் கோட்டையைச் சேர்ந்தவர். பாஸ்கரன், இவர் சேவண்ணையைச் சேர்ந்தவர்.

சென்ற இன அமைச்சர் பார் தெம்பரத்துடன் பிரதமர் காந்தி இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இதனிடையில், பிரதமர் ராஜீவ் காந்தி புதன் கிழமை இரண்டு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஷில்லாங் சென்றார்.

இப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியதும், இனப்பிரச்சினைக்கான இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து உயர் மாநாடு ஒன்றை நடத்தி முக்கிய முடிவுகளை மேற்கொள்வார் என்று தெரிகிறது

ஆரம்ப நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணம் தொழுவில் இருந்து திடீரென்று சென்னை பயணமான டாக்டர் நீலன் திருச்செல்வம் தற்காலப் புதுடில்லியில் தங்கி இருக்கிறார்.

சென்னையில் இருந்த கட்டளைத் தளபதியாகவும் தற்காலம் புதுடில்லியில் தங்கியுள்ளார்.

எனவே வார இறுதியில் புதுடில்லி, இலங்கை இன பிரச்சினைக்கு முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தலாம் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

## பயங்கரவாதத்திற்கு இந்தியாவில் இடமில்லை

புதுடில்லி, மே. 8

இந்தியப் பிரதேசத்தில் எந்தவிதமான பயங்கரவாதச் செயல்களையும் செயற்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இவ்வாறு மீண்டும் உறுதியாகக் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இந்தியா விடுத்த கண்டனத்தை வெளியிட்ட அவர்.

அப்பாவி மக்கள் கயிரிழப்பதைக்காக இந்தியாவின் கவலையையும் தெரிவித்தார்.

எல்லைகளான பயங்கரவாதச் செயல்களையும்

### இன்று விவாதம்

கொழும்பு, மே 8

கம்ப்யூட்டர் விமானத்தளத்தில் ஏவர் எம்பர் விமானம் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் குறித்து நாடாளுமன்றம் இன்று முழு நாளும் விவாதம் நடத்தும்.

## சிப்பாய்கள் - போராளிகள்
# நேற்று யாழ்நகரில் சமர்

### 4 போராளிகளும் மற்றும் மூவரும் மரணம்; ஷெல் தாக்குதலால் பலருக்கு காயம்

நல்லூர், மே 8

நேற்று யாழ் கோட்டை முகாமில் இருந்து 'ஷெல்' தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. போராளிகளினால் எதிர்த் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இச்சம்பவங்களின் போது போராளிகள் உட்பட ஏழு பேர் மரணமானார்கள்

பதினைந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடைகள், வீடுகள், வாகனங்கள் சேதமடைந்தன.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்றுப் பகல் மணி ஒரு மணி அளவில் யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்த ஷெல் சட்டைகளினால் வந்தவர்கள் வெளியே வந்தனர்.

இவர்கள் பண்ணை வீதி வடக்கு வீதி ஆகியவற்றினூடாக வெளியே வந்தனர்

அந்த வழியாக முன்னேறி வந்த சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் போது ரொக்கட் லேஞ்சர்கள், மோட்டார் ஷெல்கள் என்பன பாவிக்கப்பட்டன.

போராளிகளின் தாக்குதல்களினால் கோட்டை—'சென்றி போஸ்ட்' ஒன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சேதமடைந்த வீடுகள் கடைகள்

நல்லூர், மே 8

நேற்றைய ஷெல் தாக்குதல்களின் போது சேதமடைந்த வீடுகள், கடைகள் விபரம் வருமாறு:-

இரத்தினம் திஸ்ரி என்பவருடைய இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

இந்த வீடுகள் குருநகர் மவுண்ட்லவினியா ரோடில் இருக்கின்றன.

'நஜீவ்' ரெயிலிங் கடை

டஸ் நிலைய எதிராக உள்ள 'பம்பாய்ஸ்வீட்ஸ்' யாழ் தொலைத்தொடர்புத் நிலைக்களத்திலிருக்கண்ணாடிகளும் தொருக்கின

### கபுதேரம்

8-5-1986

வியாழக்கிழமை

கபுதேரம்:
7.25 முதல் 8.55 வரை

ராகுகாலம்:
1-35 முதல் 3.55 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

### ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை

கொழும்பு, மே 8

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

### ஆஸ்பத்திரிக்கு மேலால் சென்ற ஷெல்

நல்லூர், மே 8

நேற்று நகரில் பல பகுதிகளுக்கும் பரவலாக ஏவப்பட்ட 'ஷெல்' குண்டுகளில் ஒன்று மாநகர வெளியீட்டுத்திட்டி வெளிநோயாளர் பகுதி கூரை மீது சமீபமாகச் சென்றது.

இந்த ஷெல் பின்னர் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் விழுந்து வெடித்ததாகத் தெரிகிறது.

### ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை

கொழும்பு, மே 8

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

### கண்ணாமூச்சி ஆர்மம்!

அம்பாறை, மே 7

துறையில் இலங்கைப் பிரதமர் பிரேமதாஸாவினால் அங்கிலிப்புச் செய்யப்பட்ட ஒருகோடி மனித கண்ண மர்மமாகக் காணாமற்போயின

சில தினங்களுக்கு முன்னர் பிரதமரினால் ஒருகோடி இலங்கைக் கண்கள் அம்பாறையில் வைத்து துவக்கிக் அங்கிலிப்புச் செய்யப்பட்டன

பதப்படுத்தப்பட்ட நிலையில் பெட்டியில் இந்தக்கண்கள் அனுப்பப்பட்டிருந்தன.

இந்தக் கண்களை சத்திரசிகிச்சைமூலம் ஒருவருக்கு பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

சத்திர சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பெட்டியைத் திறந்து பார்த்தபோதுதான் கண்கள் காணாமல் போனமை தெரிந்தது.

சத்திர சிகிச்சைக்கு வந்தவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

அருகில் செல்லும் ஒன்று இந்தக் செய்தியை வெளியிட்டிருக்கிறது

### லொறியின் முன்னால் இருந்து வந்த மூவரை துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின

-நல்லூர் செய்தியாளர்: க இரத்தினராஜசிங்கம்-

நல்லூர், மே 8

லொறியை நோக்கி துப்பாக்கிச் குண்டுகள் பறந்து வந்தன.

எனது அருகில் இருந்த மூவர் குடுபடுட துடி துடித்துக்கொண்டிருந்தனர்.

நேற்று பண்ணையில் மண் ஏற்றி வந்த லொறி மீது சிப்பாய்கள் கட்டில் மரிநிழலில் உயிர் தப்பிய சென்னு ரஞ்சன் என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

நேற்று ஒரு மணி அளவில் அல்லிப்பிட்டியில் மண் ஏற்றிக்கொண்டு பண்ணை வழியாக கொக்குவில் நோக்கி வந்துகொண்டிருந்தோம்.

நானும் சாரதியும் வேறு இருவரும் லொறி

(4—ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டு சடலங்களுடன் கடலில் 2 மணி நேரம் மரணப் போராட்டம்

நல்லூர், மே 8

துப்பாக்கிச் குட்டுக் காயங்களுடன்— இரண்டு சடலங்களுடன்— கடலில் இரண்டு மணி நேரம் மிதந்தேன்.

பண்ணை லொறிப் பயணத்தில் மரிநிழலில் உயிர்தப்பிய மற்றொருவரான பாலகிருஷ்ணன் இராசதுரை (30 வயது) இப்படித் தெரிவித்தார்.

இவர் புலிகுடுதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்.

சம்பவம் பற்றி இவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறியில் ஏறி பின் பக்கமாக அமர்ந்து கொண்டேன்.

லொறி பண்ணைப் பாலத்தை அடைந்த பொழுது லொறி மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது

(4—ஆம் பக்கம் பார்க்க)

### இடிபாடுகளில் சிக்குண்டு பலர் மரணம்; 11 சடலங்கள் மீட்பு; 114 பேர் காயம்; 20 பேர் ஆபத்தான நிலையில் நகரில் பெரும் பதற்றமும் பீதியும்

கொழும்பு, மே 8

கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் நேற்றுக் காலை பெரும் குண்டு வெடிப்பு ஒன்று நிகழ்ந்தது. அதனால் மாடித்தரை கீழே இறங்கியது. இடிபாடுகளில் சிக்குண்டு பலர் மாண்டனர்!

நேற்றுப் பிற்பகல் வரை பதினொரு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன

114 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 20 பேரின் நிலை கவலைக்கிடமானது என்று அறிவிக்கப்பட்டது.

நேற்றில் ஐந்து நாட்களுக்குள் நடந்த இரண்டாவது பெரிய குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவாகும். கடந்த சனிக்கிழமை ஏவர் எம்பர் விமானம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து பதினெட்டுக்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்.

தலைநகரில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து பெரும் பதற்றநிலை உருவாகியது.

கொழும்புக் கோட்டைப் பகுதியை அதிர வைத்த பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

கொழும்பு மத்திய தொலைபேசி அலுவலகம், மூன்றுமாடிகளைக்கொண்டது மாடித்தரைகள் மரப்பலகைகளினாலானவை.

நிலத்துக்குக் கீழ், தரை, மேல்மாடி இப்படி அமைந்த அந்த அலுவலகத்திலே தரை மாடியை பொதுமக்கள் பாவித்து வந்தனர்

தொலைபேசி இணைப்புக்கள் எடுப்பதற்காக தினமும் நூற்றுக்கணக்கானோர் அங்கு சென்று நிறைவேற்றி வருகிறார்கள்

நேற்றுக்காலை சுமார் (4 ஆம் பக்கம் பார்க்க)

### புறக்கோட்டை வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன

கொழும்பு, மே 8

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, புறக்கோட்டை வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. பதற்றம்

### தீவுப் பகுதி போக்குவரத்து தடைப்பட்டது

நல்லூர், மே 8

யாழ்நகரில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம், ஷெல் தாக்குதல்களினால் பண்ணை வீதி யூடாக செல்லும் சகல வாகனங்களும் போக்குவரத்தை நிறுத்திக் கொண்டன.

இதனால் வாகனங்கள் வடக்கு, வேலணை, புங்குடுதீவு, பருத்தித்துறைக்குச் செல்லும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்

நிலவியது

கொழும்பு மாநகரில் இரவு ஒரு ஊரடங்குச் சட்டம் அமுல் நடைபெறலாம் என்று நேற்று கொழும்பில் பரபரப்பு பேச்சு அடிபட்டது.

இதனிடையில் கொழும்பில் உள்ள பெரும்பாலான அரசாங்க அலுவலகங்கள் மூடப்பட

(4—ஆம் பக்கம் பார்க்க)

### இஸ்ரவேலில் லலித்!

கொழும்பு, மே 8

மண்டலுக்குக் கடந்த ஞாயிறு இரவு புறப்பட்டுச் சென்ற தேவையானது காப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, இன்று வேலை மாடாக கலிலி நாட்டுக்குச் சென்றுள்ளதாகத் தெரிகிறது

### தென்னாபிரிக்காவில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக நிதியம்

டர்பன், மே 7

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு வழங்க தென் ஆபிரிக்காவில் உள்ள தமிழர் இயக்கம் நிதியம் ஒன்று ஆரம்பித்துள்ளது.

மண்டலில் வாழும் பொறியியலாளர் திரு வெலுஷணம் கருமார், இந்நிதியத்துக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

சமாதான முயற்சியை ஜனாதிபதி ஜெயவர்த்தனா புறக்கணித்துள்ளார். அரச படைகளினால் தமிழர் நசுக்கப் படுகின்றனர் இப்படி திரு கருமார் கூறியுள்ளார்.

### காயமடைந்தோர்

நல்லூர், மே 8

யாழ்.நகரில் நேற்று இடம் பெற்ற ஷெல் தாக்குதல்களினாலும் துப்பாக்கிப் பிரயோகங்களினாலும் காயமடைந்தோர் விபரம் வருமாறு:

செல்வேற்நிரம் மனோரஞ்சிதம் (37 வயது) கொட்டடி

இவருக்கு கையில் காயம் ஏற்பட்டது

செருப் பொனி லன் (14 வயது) குருநகர் மவுண்ட்லவினியா ரோட்,

மாதன் டெனிஸ் (37 வயது) குருநகர், மவுண்ட்லவினியா ரோட்

நிட்டா பொனி லன், (43 வயது) குருநகர், மவுண்ட்லவினியா ரோட்.

எல் பேனிப் நாதன், (23 வயது) கொட்டடி.

க ஜெயராஜ் (18 வயது) யாழ்ப்பாணம்.

கெங்காதரம் ஜெயக்குமார் (21 வயது) [illegible] காயம். வாழைப்பழக் கடைக்குக் நின்றபொழுது ஷெல் விழுந்தது.

அருளாசி மாதன் (33 வயது) யாழ் பாணம்

ஆறுமுகம் செல்வராசா (20 வயது) பண்டைதீவு.

இராசையா [illegible] (26 வயது) கோண்டாவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மரணம்

பொன், மே 7

[illegible] விமானம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்த [illegible] மக்கள் பெண் பயணி ஒருவர் இன்று மரணமானார்.

ஜேர்மனிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் இன்று காலை அங்கு மரணமானார்.

இளைய தலைமுறையினரே! தவறாமல் படியுங்கள் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் உற்பத்தி நிலையங்களுக்கு கடும் பாதுகாப்பு

## விமானக் குண்டு வெடிப்பை அடுத்து

யாழ்ப்பாணம், மே 8

லக்ஷ்மான மின் உற்பத்தி நிலையம் உட்பட நாட்டுக் உள்ள சில மின் உற்பத்தி நிலையங்களுக்கும் கேற்ற முன்னெச்சரிக்கை முகாம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

கட்டுநாயக்கா குண்டு வெடிப்பை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சில மின் உற்பத்தி நிலையங்களிலும் முப்படையினரும் 24 மணி நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எச்சரணம் கொண்டும் சந்தேகத்திற்கிடமானவர்களைக் கண்டால் உடன் நடவடிக்கை எடுக்கும்படி ஆயுதப்படையினருக்கு கூட்டுத்தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு வெளிநாட்டு உதவித் திட்டங்களும் பகுதியிலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு படைவீரர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளுக்கு வெளியார் செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

## மயான மடம் இடிந்து விழும் நிலையில்

வட்டுக்கோட்டை மே 8

வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி மக்களும் சித்தங்கேணி கிறிஸ்தவ மக்களும் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக பயன்படுத்தி வந்த கொத்துத்தறை மயானமடம் இடிந்து விழும் நிலையில் தற்போது பழுதடைந்துள்ளது.

இந்த மடத்தில் இருக்கும் முருகைக் கற்களை பொதுமக்கள் பிரித்து எடுத்துச் செல்வதனாலும் சுவர் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

அத்து மல் சுவருக்குப் போடப்பட்டிருக்கும் சந்தனக் உமுத்துப்போயிருப்பதும் இதன் அபாய நிலைக்குக் காரணமாகவுள்ளது.

சிவன்கோவிலடி, கலைநகர் பகுதிகளிலுள்ள பொது ஸ்தாபனங்கள் அரச உதவியுடன் இந்த மடத்தைத் திருத்தி அமைக்க முயற்சிக்க வேண்டுமென்பது பலரின் அபிப்பிராயமாகும்.

# நீரிழிவு பயங்கரமான ஒரு நோய் அல்ல

## கருத்தரங்கில் பேராசிரியர் சரவணபவானந்தன் உரை

யாழ்ப்பாணம், மே 8

நீரிழிவு நோய் பயங்கரமானதொன்றல்ல அதை கட்டுப்படுத்துவதற்கு இன்கலின் பாவிக்கவேண்டும் இரண்டு வகையான குளிசைகளும் பாவிக்கவேண்டும் காலம் தவறாது உணவு உண்கொள்ள வேண்டும் உணவுக்குறைபாடு வேறுபல விளைவுகளுக்குக் கொண்டுவரும் ஆபத்தை உருவாக்கும்.

கோப்பாய் லயன்ஸ் கழக ஆதரவில் நடைபெற்ற நீரிழிவு நோய்க் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் வளாக சட்டமருத்துவப் பேராசிரியர் கனாநிதி சரவணபவானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் றெஸ்ற்வக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். செல்வரத்தினம் தலைமை வகித்தார்.

மேலும் அவர் பேசுகையில்,

நீரிழிவு நோயை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம் இன்கலினால் தடுப்பது ஒருவகை. மற்றது இன்கலினுக்கும் கட்டுப்படாதது. குளுகோன் இடமளிப்புப் பரிசோதனைமூலம் இந்த நோயின் தன்மையைக் கண்டு அறியலாம் என்றார்.

கட்டு, லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும், வட இலங்கை மருத்துவக் கல்லூரி இயக்குநருமாகிய வைத்திய கலாநிதி நாகநாதன் அடுத்து உரையாற்றுகையில், மிதமிஞ்சிய தாகம், அடிக்கடி சிறுநீர் கழிதல், நா, உதடு வறட்சி ஆடைதன் நிறை குறைதல் போன்ற இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகளாகும் என்றார்.

கோப்பாய் மருத்துவசாலை அதிபர் டாக்டர் நவரத்தினராசா சேகுகையில், நீரிழிவு நோயுடையவர்கள் இடைவிடாது மரிசோதித்து குளிசைகள் விழுங்க வேண்டும் என்றும் தவறினால் கண் கால்வலு பெறுவதுடன் சிலவேளை மயங்கியும் பாதிப்படையும் எனத் தெரிவித்தார்.

## காவலூர் இலக்கிய வட்டக் கூட்டம்

யாழ்ப்பாணம் மே 8

காவலூர் இலக்கிய வட்டத்தின் 6 ஆவது ஒன்றுகூடற் கொழுத்கூட்டம் மே 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரம்பொன் ஸ்ரீ சண்முகநாத கலா வித்தியாலயத்தில் நடைபெறும்

திரு ஆ. சபாரத்தினம் தலைமை வகிப்பார். சங்கச் செயலாளர் திரு.கே. ஆர். சிவலிங்கம் கூட்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

ஆயுள்வேத வைத்தியர் ஏ. வி. இராசரத்தினம் உரையாற்றுகையில் நீரிழிவு நோய் நிவாரணத்தில் சித்த ஆயுள்வேத வைத்தியத்தின் பிரதான பங்குபற்றிக்குறிப்பிட்டார்

மலமூலவிகளுவிலிருந்து காய்ச்சப்பட்ட கசாயங்கள் சிந்தரோகை பூரணமாகக் குணமாக்க வல்லது என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

டாக்டர் நாகநாதன் கோப்பாய் லயன்ஸ் கழகத்திற்கு நீரிழிவுபற்றித் தன்னால் எழுதப்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்து அவற்றை பெற்று கரும் பணத்தினால் அதிநியாயமான மருந்து வகைகளை வாங்கும்படி கோரினார்.

கோப்பாய் லயன்ஸ் கழகச்செயலாளர் திரு. சண்முகேந்திரன் நன்றி நவின்றார்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தந்தை செல்வா காட்டிய பாதையில் செல்ல வேண்டும்

### நினைவுதினக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, மே 8

தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தந்தை செல்வா பல முறை முயன்று ஒப்பந்தங்கள் கூடச்செய்தார். அனால் ஒரு தலைவர் ஆதரிக்க மற்றொரு தலைவர் எதிர்க்குமே சூழ்நிலை இருந்த தால் பிரச்சினைகள் தீர்க்க முடியாமல் வந்தன. ஆகவே இன்றைய கால சட்டத்தில் நாம் சகலரும் இணைந்து அவர் காட்டிய பாதையில் செல்ல வேண்டும்.

இப்படி கூறினார் யாழ் மக்கள்வாழை வாரனி முத்துவை பேராசிரியர் கனாநிதி திரு சி. க. சிற்றம்பலம்.

தெல்லிப்பளை ப' நோ. கூ. சங்க மண்டபத்தில் நடந்த தந்தை செல்வா நினைவு தினக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினார்.

தெல்லிப்பளை ப. நோ' கூ. சங்கத் தலைவர் திரு. சி வெலாயுதராசா தலைமையில் கூட்டம் நடந்தது.

கலாநிதி சிற்றம்பலம் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் எம் பிரச்சினைகளை ஆயுத வழியில் தீர்த்து வைக்க அரசுகள் முயலவில்லை

இதன் காரணமாக இன்று நாம் வேறு நிலையில் நிற்கிறோம். இந்த நிலை ஏற்படலாம் என்று தந்தை செல்வா அன்றே கூறியிருந்தார்.

தந்தை செல்வாவின் அரசியல் பிரவேசம் இன்னாது இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை என்ற நிலை இருந்திருக்கும்.

எமக்கும் பிரச்சினை உண்டு அதை தீர்க்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு என்று குரல் எழுப்பியவர் தந்தை செல்வா.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் எல்லாம் தொன்மை மக்கள் உரிமையுள்ளவர்களாக வாழ்கிறார்கள்.

அதே வகையில் நாமும் உரிமையுள்ளவர்களாக வாழ வேண்டும் என்ற நோக்குடன் போராடியவர் தந்தை செல்வா.

இப்படி அவர் கூறினார்.

வாழ் மக்களின் சமூக விஞ்ஞானத்துறை பேராசிரியர் திரு. வ. ஆறுமுகம் உப்பட மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர்.

## சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் துன்னாலை தெற்குக்கு ரூபா 10 ஆயிரம்

### 20 யுவதிகள் பயன் பெற்றனர்

பருத்தித்துறை, மே 8

அகிராக அபிவிருத்தி மைச்சின் பொருளாதார சமூக நிரோயிக சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் துன்னாலை தெற்கு கிராமசேவகர் பிரிவுக்கு ரூபா 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

துன்னாலை, குடவத்தை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் துன்னாலை தெற்கு கிராம சேவை அதிகாரி திரு சி. ஏ. ஞானச்சந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷ கூட்டத்தில் இப்பணம் வழங்கப்பட்டது.

சுரவெம்பு உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஜயரத்னா சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெற 10 யுவதிகளுக்கு தலா 500 ரூபாவீதம் பணம் வழங்கினார்.

கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, ஆட்டு நடை வளர்ப்பு ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

விழாவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பி. செகப்பிரமணியம் துன்னாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ஆ. வ. தங்கராசா, துன்னாலை இளைஞர் சபைத் தலைவர் திரு க. இராசையா ஆகியோரும் பேசினர்.

## 'ரயில் பயணங்களில்' ரவிபாபு சொல்கிறார்

வளர்ந்து வரும் ஒளிப்பதிவாளர்களில் ஒருவர் பி. எஸ் ரவிபாபு. முறைப்படி பல ஆண்டுகள் திறமை வாய்ந்த மேதைகளின் ஒருவரிடம் கீழ் உதவியாளராகப் பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளார் இவர்.

நிரையுலகப் பிரவேசம் குறித்து அவர் சொல்கிறார்:

சென்னைதான் என் சொந்த ஊர் ஆரம்பத்தில் திருமணம் போன்ற நிழ்ச்சிகளுக்குப் போய் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தேன் அப்போதே படவுலகில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம் இருந்தது.

1968 ஆம் ஆண்டு விஜயா ஸ்டுடியோவில் ஒளிப்பதிவு உதவியாளராகப் போய்ச்சேர்ந்தேன். நான் ஆறாவது உதவியாளர். பல ஒளிப்பதிவாளர்களின் வேலையையும் அருகிலிருந்து பார்த்து உணர முடிந்தது.

அதற்குப் பின் அப்போது பல பெரிய நிறுவனப் படங்களுக்கு பணியாற்றி வெண்டிருந்த பாரு நிராவிடம் உதவியாளராகப் போய்ச்சேர்ந்தேன்

எதிர்மாமா, இருளும் ஒளியும், ஆலயதரிசனம், எங்கள் தங்கம், பொன்னூஞ்சல், இனியவளே, பட்டுச் சேலை அணியவா போன்ற பல்வேறு வகை படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தேன்.

'ரயில்பயணங்களில்' படத்திற்கு நான்தான் ஒளிப்பதிவாளர்

அதற்குப்பின் நான் கேமராமேனாகப் பணியாற்றி வெளிவந்த படங்கள் நேரம் நல்ல நேரம், ஒன்றிலிருந்து ஒன்று, நெஞ்சிலே நீயே, நாலு பேருக்கு நன்றி, தென்றல் தொடாத மலர், இனியவளே, பட்டுச் சேலை அணியவா போன்றவை.




## மக்கள் முகம்

### உருத்திரபுரம் அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள்

கிளிநொச்சி, மே. 8

கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு கமீபத்தில் நடைபெற்றது. பிள்ளை வருடோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவாகினர்:

தலைவராக திரு. ஆ. செல்வத்துரை ஐந்தாவது முறையாகவும் தெரிவாகினார்.

உபதலைவர்களாக திரு நா. இரத்தினம், திரு இ. நாகரத்தினம் ஆகியோர் தெரிவாகினர்

செயலாளராக திரு. செயலாளராக திரு எஸ். ஜெயநாதன், பொருளாளராக திரு. ஜே. தாமியன், ஆகியோருடன் எழு பேர்கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

### புங்குடுதீவு கிழக்கு கிராம முன்னேற்ற சங்க நிர்வாகிகள்

புங்குடுதீவு, மே 8

புங்குடுதீவு கிழக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கத்தின் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் சி. சுவினன், உபதலைவர்கள்: திரு க. பொன்னம்பலம், திரு வ. பிரான்சிஸ், செயலாளர்: திரு. செ. இராமச்சந்திரன், பொருளாளர்: திரு வ. நடராசா.

## பண்டிதமணியால் தனங்கிளப்புக்கு பெருமை

### ஆத்மஜோதி முத்தையா உரை

உருத்திரபுரம், மே 8

பண்டிதமணியை தமிழ் உலகுக்குத் தந்த பெருமை தனங்கிளப்பையே சாரும். ஆகவே பண்டிதமணியின் பெயரால் நாம் இந்தக் கிராமத்தைமுன்னேறிப் பாடுபட வேண்டும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பெயரால் அமைக்கப்பட்டு இருக்கும் தனங்கிளப்புக் கிராமத்திலே இது சம்பந்தமாக நடத்தப்பட்ட முதலாவது ஆலோசனைக் கூட்டத்தில் நாவலர் பிட்டி ஆத்மஜோதி நா முத்தையா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் ஆலோசனைக் கூட்டம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் துரைராசா தலைமையில் நடைபெற்றது.

திரு நா. முத்தையா தொடர்ந்து பேசுகையில் பண்டிதமணியின் தாயாரின் சொந்த ஊரான தனங்கிளப்பில் பண்டிதமணியின் பெயரால் அபிவிருத்திக் ஒன்றை ஆரம்பிக்க பண்டிதமணியின் மாணவர்களும், அபிமானிகளும் முன்வந்துள்ளனர்.

இத் திட்டத்திற்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரும் உதவ முன்வந்துள்ளார்.

அவர் இத்திட்டத்திற்கு அரசாங்கத்திடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிலிருந்தும் உதவிகளைப் பெற்றுத்தரவுள்ளார் என்றார்

இவ் வைபவத்தில் பண்டிதமணியின் மாணவர்கள், ஆகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் சி. க. வேலாயுதபிள்ளை, திருநெறிக்கழகத் தலைவர் ப. க. கணேசபிள்ளை, முல்லைநகர் கிராமசேவையாளர் நமசிவாயம், ஆசிரியர் பலரும் உட்பட தமிழ் மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சமய, சமூக ஆர்வலர்களின் பிரமுகர்களும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## முஸ்லிம்களை மனித உரிமையுடன் வாழவிடுங்கள்

### கிராமோதய தலைவர் கேட்கிறார்

மட்டக்களப்பு, மே. 8

கிழக்கு மாகாணம் வாழ் முஸ்லிம்களை மனித உரிமைகளுடன் வாழ விடுங்கள் முஸ்லிம்கள் மீது திடீரென்று தாக்குதல் மீது இனிமேல் நடைபெறுவதான தெரிகிறப்படுகின்ற வரக்கூறுதல்கள் சொல்லில் தானே தவிர செயலில் இல்லை

மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற சமாதான குழுக் கூட்டத்தில் உரையாற்றிய கிராமோதய தலைவர் ஜனாப். எம். சி எம். அரீஸுல்லா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபர் திரு. எம் அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காத்தான்குடி ப. நோ. கூ. சங்கம் கொள்கை படுத்தப்பட்டது அரசு சொத்தாக இருக்கலாம் ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம் சமூகம்தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் இப்படி அவர் கூறினார்.

சமாதான கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பிரமுகர்கள் எமது சமூக மக்கள் கண்டுகின்ற நிலையில் நாம் இருக்கின்றோம்

முஸ்லிம்களின் உயிர், உடைமைகள் மீதான தாக்குதல் மேற்கொள்வோர் தண்டிக்கப்படுவோர்கள், என கவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன ஆனால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றார்கள்.

காத்தான்குடி ப நோ கூ சங்கம் கொள்கை படுத்தப்பட்டது அரசு சொத்தாக இருக்கலாம் ஆனால் பாதிக்கப்பட்டது முஸ்லிம் சமூகம்தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் இப்படி அவர் கூறினார்.

## முழுமையான நஷ்டஈடு இன்றி 300 ஊழியர்கள் அவதி

மன்னாரதீவு, மே 8

வாழ் மாவட்ட பெருந்தெருக்கள் திணைக்களத்தில் சேர்ந்த முன்னூறுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை நிக்கம் செய்யப்பட்டு இரு வருடங்களாகின்றன. [illegible] சலுகைகளான நஷ்டஈடு முழுமையாக வழங்கப்படவில்லை.

நீண்டகாலமாக இத்திணைக்களத்தில் வேலை பார்த்து வந்த ஊழியர்கள் தற்பொழுது எந்த வித வேலையும் தேடிக்கொள்ள முடியாது கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

[illegible] ஊழியர்கள் தங்களுக்கு தொகை முழுவதையும் பெற்றுத் தருமாறும் தங்களுக்கு வேறு திணைக்களங்களிலாவது வேலை வாய்ப்பு ஏற்பாடுத்தித்தருமாறும் கோரும் மகஜர் ஒன்றை யாழ் அரசாங்க அதிபர் திரு. [illegible] கையளித்துள்ளனர்.

## மாணவரிடையே கட்டுரை, சுவரொட்டி, பேச்சுப் போட்டிகள்

### சுகாதாரம் சம்பந்தமாக

யாழ்ப்பாணம், மே 8

சுகாதார அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக பாடசாலை மாணவருக்கு இடையே கட்டுரை, சுவரொட்டி, பேச்சுப் போட்டிகளை நடத்த யாழ் மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்

ஆணையாளர் இது சம்பந்தமாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது

'யுனிசெப்' ஸ்தாபனத்தின் உதவியுடன் யாழ் மாநகரப் பகுதிகளில் சுகாதார அபிவிருத்தி வேலைகள் 1984 இல் ஆரம்பமாகின.

மாநகராட்சி மன்றம் அளிக்கும் சேவைகளை மக்கள் சரிவர பிரயோசனப் படுத்துவதற்கு பொதுமக்கள் பங்களிப்பு அவசியம்.

இதற்காக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

விவரங்கள் வருமாறு;

1. மாநகர எல்லைக்குள் உள்ள சில பாடசாலை மாணவர்களும் கட்டுரை, சுவரொட்டிப் போட்டி களில் பங்கு பற்றலாம்

2. 'யுனிசெப்' திட்டத்துக்கு அடங்கிய இடங்களில் உள்ள பாடசாலை மாணவர் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

போட்டிகளுக்கான விடயங்கள்:

1 சூழல் சுகாதாரமும் மக்கள் பங்கும்

2. குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதன் அவசியம்

3. தாய்ப்பாலின் முக்கியத்துவமும் தரமான உணவு கொடுப்பதன் அவசியமும்

4 வயிற்றோட்ட நோய்களும், அதனைத் தடை செய்தலும்

விண்ணப்ப முடிவு திகதி 15. 05 1986 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: ஆணையாளர் 'யுனிசெப்' திட்டம், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

போட்டிகள் மே கடைசி வாரத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி செய்திக் குறிப்புக் கூறுகிறது

### குடிதண்ணீர் தட்டுப்பாடு

மன்னாரதீவு, மே 8

மன்னாரதீவுப் பகுதியிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது

தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியாகி இப்பகுதியிலுள்ள நன்னீர் கிணறுகளும் வற்றி வருகின்றன.

கரையோரப் பகுதி மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றார்கள்.

1ஆம் ஆண்டு நினைவு திதி

திரு. சிவதருநாதன் நித்தியநாதன் (தயா)

ஆண்டவன் படைப்பு: 03 - 09 - 1965 ஆண்டவன் அழிப்பு: 21 - 04 - 1985

திதி: 09-05-1986

நித்தி நித்தி என்று நித்தம் அழைத்த நாம் நித்த நடுமாறுகிறோம் நித்த பிரிவாக. ஆண்டு ஒன்று சென்றிடினும் ஆறாமல் எம் உள்ளம்! இருள் சூழ்ந்த எம் தாயகத்தின் விடிவுக்காய் சுமந்தாய் உன் உயிரை. அன்றே சென்றது இன்னுயிர் அட்டூழியங்களை அறிந்தாய்! இன்றோ இன்று நாளாவது ஐயா உன் இனிய இதயம் உலகில் ஆறாமல் சாந்தியடையட்டும்.

உன் பிரிவால் வாடும்,
தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர்.

'சந்தன் அருள்',
இதயாலை.

Digitized by Noolaham Foundation.
http://noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

தன்னம்பிக்கையோடு முயற்சியைச் வெற்றி உனதேயாகும்.
-ஜேம்ஸ் அலன்

உதயன்
இல. 15, [illegible] வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 21078
08-05-86

## மாணவர் கல்வியும் பஸ் சேவைகளும்

போக்குவரத்துச் சபை பஸ்களில் மாணவர்கள் பயணம் செய்வதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு புரிய வேண்டும்.

வடமாகாண போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இவ்வாறு ஒரு பிரேரணை வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நாட்டின் ஏனைய பிரதான நகரங்களில் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கும், சௌகரியத்துக்குமாக தனியாக பாடசாலை பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

அதனால் மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் பாடசாலைகளுக்குச் சிரமம் இன்றிப் போய் வரக்கூடியதாக இருக்கிறது.

வடபகுதியிலும் முன்னர் பாடசாலை பஸ் சேவைகள் நடத்தப்பட்டன. இப்போது அவை இல்லை. பொதுமக்கள் பயணம் செய்யும் போக்குவரத்துச்சபை பஸ்களிலேயே பள்ளிச் சிறார்களும் பாடசாலை போய் வரவேண்டி உள்ளது.

ஏற்கனவே வடக்கில் பஸ் சேவை சீர்குலைந்து போய் இருந்தது. அதனால் பொதுமக்களோடு சேர்ந்து மாணவர்களும் பெரும் அவஸ்தைப்பட வேண்டியதாயிற்று.

இரண்டரை வருட கடந்த திங்கட்கிழமை தொடங்கியதோடு மாணவர்கள் மேலும் கஷ்டமுறும் நிலை உருவாகி இருக்கிறது.

வடக்கில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்கனவே நடத்திய பிரதான சேவைகளைக்கூட தமுக்காகவும், சீராகவும் நடத்த முடியாத நிலை போக்குவரத்துச் சபைக்கு ஏற்பட்டிருப்பது உண்மையே.

எரிபொருளைக் குறைக்க வேண்டி இருந்து தருவிப்பதில் கஷ்டங்களும், சிரமங்களும் இருப்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதனால் பஸ் சேவைகளைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதும் இயல்பே.

ஆனையால் வட மாகாண போக்குவரத்துச் சபைத் தலைவரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து மாணவர்களின் பயணத்துக்கு உதவியும், ஒத்துழைப்பும் நல்க வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு பஸ் பிரயாணிக்கும் உண்டு

பஸ் சேவைக் குறைப்பினால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாதிருக்க பார்த்துக் கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களாகிய பொதுமக்களுக்கும் — பயணிகளுக்கும் உண்டு

வருங்காலச் சந்ததியினரின் கல்வி எந்தப்புறச் சூழலாலும் இருண்டு போகாது பார்த்துக்கொள்வதும் பெற்றோர்கள், ஊர்ப்பெரியோர்களாகிய பொதுமக்களின் முக்கிய கடமையாகும்

பெரியவர்கள் இடிபடும், நெரிபட்டும் போக வேண்டிய சூழ்நிலையில் அல்லாறு செய்யலாம். ஆனால் மாணவர்கள் — பாலர்கள் நெரிபட்டு பயணம் செய்தால் அவர்கள் கனத்து, இளைத்துவிடுவார்கள்.

அதன் பின்னர் வகுப்புகளில் இருந்து பாடங்களைக் கிரகிக்கும் தன்மையை இழந்து விடுவார்கள். அதன் விளைவாக அவர்களின் கல்வி பாதிக்கப்படும் — பாழாகிவிடும்.

இதனை மக்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். பெரியவர்களாகிய நாம் கஷ்டங்களை அனுபவிக்கப் பின் நிற்கக் கூடாது. — தயங்கவும் கூடாது

தமிழ் மக்களுக்குப் பல வகைகளாலும் கஷ்டமான காலம் இது. கஷ்டங்களை எதிர்கொள்ளவும், அனுபவிக்கவும் நாம் பழக்கப்பட வேண்டும் அப்போதுதான் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க முடியும் எங்கள் வருங்காலச் சந்ததியினரின் நலனுக்காகவும் பெரியவர்களாகிய நாம் பிரயாணக் கஷ்டம் போன்ற சில சிரமங்களை அனுபவித்தால் பாரமில்லை. அந்த அனுபவத்தை எமது வளர்ப்புக்களும் இல்லையேல் நாமும் வாழ முடியாது எங்கள் சந்ததியும் வாழமுடியாது

## கல்வி நிர்வாக சேவை பதவி உயர்வு

கொழும்பு. மே 9

இலங்கை கல்வி நிர்வாக சேவையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள வடமாகாணத்தில் நிரந்தர கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றி வந்த வி.நொச்சி, மூலிதீவு கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூரும் மன்னார் கல்விப் பணிப்பாளர் செல்வி. பி. ஆறுமுகமும் இத்திட்டத்தால் முதலாம் வகுப்புப் பதவி உயர்வு பெற்றனர். இப்புதிய திட்டம் ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்பட்டு வருகின்றது.

## நல்லறிவு பரப்பி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்

### யாழ் கம்யூனிஸ்ட் பிரமுகர் கருத்து

யாழ்ப்பாணம், மே.8

நல்லறிவைப் பரப்பி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

மக்கள் பிரகாரமான வாழ்வியலில் புதிய அணுகுமுறை 15/1, பலாலி வீதியில் நிறுத்தி வைத்த உரையாற்றிய யாழ்ப்பாண கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. அ. வைத்திலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். விஜயானந்தன் வைபவத்துக்கு தன்மை வகித்தார்

திரு. வைத்திலிங்கம் தொடர்ந்து உரையாற்றியது:–

1917 ஆம் ஆண்டு புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவில் எழுத்தறிவு இல்லாதார் எண்ணிக்கை பெரிது. ஆனால் புரட்சியின் பின்னர் இந்த நிலை மாறியுள்ளது. மக்கள் பிரகாரமாக ரஷ்யா பல நாடுகளில் மக்களின் அறிவை வளர்க்க உதவுகின்றது.

குறிப்பாக வளர்முக நாடுகளில் ரஷ்யா செய்யும் இப்பணி ஒரு தன்னலமற்ற சேவை ஆகும். வரலாறு பழக்கத்தை மக்கள் மத்தியில் வளர்த்து அவர்களை பூரண மனிதர்களாக மலரச் செய்ய வேண்டும்.

இவ்வாறு திரு வித்யானந்தன் உரையாற்றினார்.

## நட்சத்திர யுத்த ஒத்துழைப்பு

# அமெரிக்காவுடன் இஸ்ரவேல் உடன்படிக்கை

### வாஷிங்டனில் கைச்சாத்தாகியது

வாஷிங்டன், மே7

அமெரிக்காவும் இஸ்ரவேலும் நட்சத்திரப் போர் திட்டத்தில் ஒத்துழைக்கும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வெயின்பேகரும் இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சரும் வாஷிங்டனில் வைத்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அமெரிக்காவின் நட்சத்திரப்போர்த் திட்டத்துக்கு ஒத்துழைக்குக் முன்றாவது நாடாக இஸ்ரவேல் சேர்ந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதென ஏற்கெனவே பிரிட்டனும் மேற்கு ஜேர்மனியும் அமெரிக்கவுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன.

ஆயுத அழிவிலிருந்து உலகைப் பாதுகாக்கக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கையே நட்சத்திரப் போர்த்திட்டம் என அமெரிக்கா நியாயம் கற்பித்து வருகிறது

புறவெளியைப் போர்க்களமாக்க அமெரிக்கா தயாரித்துவரும் சதித்திட்டம் என சமாதானம் விரும்பும் உலகின் நாடுகள் பல இதைக் கண்டித்து வருகின்றன.

நட்சத்திரப் போர்த் திட்டத்துடன் இஸ்ரவேலும் இப்பொழுது இணைந்துள்ளது. மத்திய கிழக்கின் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு மேலும் புதிய சவால் கணைத் தோற்றுவிக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

## வெளி உலகில்

### சோவியத் அணு உலை:– கதிர்வீச்சு அபாயம் தணிந்து விட்டது

#### அறிக்கை மூலம் ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, மே 7

ரஷ்யா சோர்னோபில் நிகழ்ந்த அணு உலை விபத்தில் கதிர்வீச்சு அபாயம் தணிந்து வருகிறது

இவ்வாறு ரஷ்யா தரப்பில் வெளியிடப்பட்ட அதிகார பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனினும் அயல் நாடுகள் கதிர்வீச்சு அபாய அச்சம் காரணமாக கூடிய அளவிலான மாதுகாப்பு நடவடிக்கையை தொடர்ந்து எடுத்தவருவதாகக் கூறப்படுகிறது.

விபத்து நடந்து 9 நாள் ஆகியும் அணு உலைத் தீ இன்னும் எரிந்து கொண்டிருப்பதாக வெளிவந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கதிர் வீச்சு அபாயம் காரணமாக ஆஸ்பத்திரியவும் மருத்துவ கிறபனைக்குத் தடைசெய்துள்ளன.

வடக்கு அமெரிக்காவிலான் வெளியை நோக்கி கதிர்வீச்சப் படிவம்ஒன்று நகர்ந்து கொண்டிருப்பதாகவும் மேலும் அஞ்சப்படுகிறது.

### பனாவில் பட்டு விபத்து 40பேர் மரணம்

புதுடில்லி மே 7

பிகாரில் பட்டு நகருக்கு அண்மையில் நேர்ந்த பட்டு விபத்தில் 40 பேருக்கு கூடுதலானவர்கள் இறந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.

நிருமண நிழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட 55 பேர் படகில் பயணம் செய்ததாகவும் ஆற்றுக் கழியில் அகப்பட்டு படகு கவிழ்ந்து விபத்து நேர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

மீட்புப் பணிகள் நடைபெறுவதாக செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெ. ஆபிரிக்க விடுதலைக்கு

### பாரதத்தின் ஆதரவு தெம்பூட்டுகிறது

#### தலைவர் தம்போ கூறுகிறார்

புதுடில்லி, மே 7

ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு பாரதம் ஆதரவு தெரிவித்து வருவது விடுதலை இயக்கங்களுக்கு தொடர்பூட்டுவதாக இருக்கிறது.

இவ்வாறு பாரதத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெ. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ தெரிவித்தார்.

பாரத வெளியுறவு அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் குழு ஒன்று திரு தம்போவை விமான நிலையத்தில் வரவேற்க வோர் தே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த போது:

ஆபிரிக்க நாடொன்றில் அணிசேரா இயக்கத்தின் அடுத்த உச்சி மாநாடு நடைபெற இருக்கும் காலகட்டத்தில் பாரதம் வந்துள்ளேன்

தெ. ஆபிரிக்க விவகாரங்கள் தொடர்பாக இங்குள்ள அமைச்சர்களுடன் விவாதித்த இந்த விஜயம் பயனுடையது.

பிரதமர் ராஜீவ், ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் மற்றும் பாரதத்தின் தலைவர்கள் பலரையும் சந்தித்து எமது நிலைமையும் நடவடிக்கைகளையும் விளக்கி இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்க

### வெளையர்களுக்கு புதிய நெருக்கடிகள்

#### ஜோகானஸ்பேக் பத்திரிகை தகவல்

மடிவோ, மே 7

தென் ஆபிரிக்காவிலுள்ள சிறுபான்மை வெள்ளை இனத்தவர்கள் சமூக பொருளாதார நெருக்கடிகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஜோகானஸ்பேக்கிலிருந்து வெளிவரும் வைஸன் சிலக்மெயில் என்னும் சஞ்சிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வேலையிழப்பு பிரச்சினை காரணமாக பல வெள்ளை இனத்தவர் இரானுவத்திலிருந்து சேர்ந்துள்ளனர்.

இன்னும் பலர் சேவை சம்பந்தம், அனுமதி விடுதிகளில் கை ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வாடகை செலுத்தாததால் பல இளைஞர்கள் வீடிழந்து அழுந்தனர்.

இதனால் பல இளைஞர்கள் பூர்கோக்களில் வசிக்குவதன் தமது வாழ்வை ஓட்டுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக அருள் நெறி மன்ற

### அருளாளர் ஒன்று கூடல் கூட்டம்

#### சித்தன்கேணியில் நடைபெறும்

வல்வெட்டித்துறை, மே 8

அகில உலக அருள் நெறிமன்ற அருளாளர் ஒன்று கூடல் கூட்டம் சித்தன்கேணி சுவாமி விபுலானந்தர் மடத்தில் நடைபெறும்

இளைப்பாறிய கல்வி நிர்வாகி திரு சோ. வேலாயுதர் தலைமையில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிளவில் நடைபெறவுள்ளது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சந்தரவிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

மன்றச் செயலாளர் குழந்தைக் கவிஞர் திரு க. சச்சந்தசாமி வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ் மவிக்கழகப் பேராசிரியர் திரு ப. சந்திரசேகரம் 'விவேகானந்தத்துவம்' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம், முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோருக்கு நினைவு அஞ்சலி செலுத்தப்படும்

'அருளியலாளர்ச்சிக்கு முதல் ஆதாரம் எது? என்ற பொருளில் விவாத அரங்கும் நடைபெறும். அறிவாதாரம் என திருக குணரத்னசா (செங்கை ஆழியான்) திரு. எம். கே. தர்மலிங்கம் ஆகியோரும் வொருளாதாரம் என வித்துவான் மு. சபாரத்தினம், திரு வே. சதிரவேலு (குகதாசன்) ஆகியோரும் விவாதவுரை நிகழ்த்துவர்.

நன்றியுரையை மன்ற இணைச் செயலாளர் புலவர் வே. கனகசபாபதி நிகழ்த்துவார்

## சமய நிகழ்ச்சிகளில்

### ஸ்ரீ சுப்பிரமணியர் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 8

முரசோடை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய வளாகத்தான பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 28 ஆம் திகதி சிறப்பாக நடைபெற இருக்கிறது

மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை சதிரடிகள் தேவஸ்தான பிரதம குரு சகலாகம சக்கரவர்த்தி ஸ்ரீ நா சர் வேஸ்வரக் குருக்கள் நடத்தி வைப்பார்கள்

பிரதம குருக்களுடன் பதின் மூவருக்கும் மேற்பட்ட சிவாச்சாரியர்கள் குடமுழுக்கு விழாவில் கலந்து கொள்ளுகிறார்கள்.

விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் ஆலய நிருவாகிகள் சகல வினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

## தேரரின் வட பகுதி அனுபவங்கள்

# விகாரைக்கு வர பயந்த இந்து மத குரு

சோமாதிமாரி

குறள்:

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாமல் இல்லிறப்பான் கண்.

பொருள்:

பகை, பாவம், அச்சம், பழி என்னும் இந்த நான்கு குற்றங்களும் பிறன் மனையிடத்து நெறி தவறி நடப்பவனிடத்திலிருந்து நீங்கி வரும்.

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்த வண.தெல்கெல்ல பதுமசிரி தேரர் 'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' என்ற தலைப்பில் சிங்களத்தில் புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றர்டே ரிவியூ' என்ற ஆங்கில வார சஞ்சிகை இப் புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட ஆரம்பித்துள்ளது.

இதன் தமிழாக்கத்தின் நான்காம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

ஒரு நாள் இந்துமத குரு ஒருவரை விகாரைக்கு வரும்படி அழைத்தேன்.

"நான் உங்கள் விகாரைக்கு வர விருப்பம். ஆனால்பயப்படுகின்றேன். ராணுவம் என்மைத் தாக்கலாம் என்று சொல்கிறார்கள்" என்று சொல்லி அந்த இந்து மத குரு சொன்னார்.

இது எனக்கு வேதனையைத் தந்தது. பிரிவினை ராணுவத்தினர் அச்சமயம் ஆயுதப்படை பொறுப்பதிகாரியாக இருந்தார்

நான் பிரிகேடியரைப் போய் சந்தித்தேன். இந்துமத குருவைச் சந்தித்து அவரின் பயத்தைப் போக்கும்படி கூறினேன்.

நானும் பிரிகேடியரும் வேறு அதிகாரிகளும் போய் இந்துமத குருவைச் சந்தித்தோம். அதன்பின்னர் இந்துமத குரு விகாரைக்கு வந்து போக ஆரம்பித்தார்.

விகாரைக்கு 13 அடி நீளமான 6 பலகைகள் தேவையாக இருந்தன. இப்பலகைகள் புளியங்குளத்திலிருந்து கொண்டு வரப்படவேண்டியிருந்தது

இப்பிரச்சினையை இந்து மதகுருவிடம் சொன்னேன். தன்னிடம் சொல்லப்பட்ட ஆளவான பலகைத் துண்டுகள் இருப்பதாக அவர் சொன்னார் ஒரு மணிக்குள் கொண்டு வந்து தருவதாகச் சொன்னார் ஒன்றரை மணியளவில் எனக்கு வேண்டிய பலகைகள் கிடைத்தன

தமிழர்களுடனான ஒரு பழக்கம் இருந்தது விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளில் ஒரு பகுதியை விகாரைக்கு அனுப்பி வைப்பதே அந்தப் பழக்கம். அப்படியான நல்லுறவு எம்மிடையே உருவானது.

தெல்லிப்பழையில் ஒரு பொதுக்கூட்டத்தில் நான் உரையாற்ற நேர்ந்தது

"நாம் சிங்களவர் என்று கூறிக்கொண்டு தமிழரை அழிக்கச் சண்டை போடுகிறோம்"

பௌத்தர்கள் மட்டுமல்ல, இந்துக்களும் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டவர்கள்.

"தமிழருடன் சண்டை பிடித்த பின்னர் நான் இறந்து தமிழத் தாயின் வயிற்றில் மறுபிறப்பு எடுப்பேன் அதன் பின்னர் நான் தமிழன் என்று கூறிக் கொண்டு சிங்களவரைக் கொல்லத் தொடங்குவேன்.

"சிங்களவரை எதிர்த் தமிழர். இறந்த பின்னர் சிங்களவராக மறுபிறப்பு எடுக்க பின்னர் தனது முந்தைய உறவினர்களை கொல்லத் தொடங்குவார்.

"இந்தமாதிரி சண்டை பிடிப்பதில் என்ன அர்த்தம் உண்டு?" —

இப்படி நான் பேசி முடித்தவுடன் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் ஆரவாரம் சில நிமிடங்கள்வரை நீடித்தது

ஓர்வு பெற்ற ரவிவேலி ஷண் மாஸ்டர் எனக்குப் பின்னர் பேசினார்.

"சண்டை போன்ற பிரச்சனை நிறைய இருந்தால் இவர் வரவில் இளைப்பாறி கூடவே இருக்காது"

இப்படி அந்த ஓய்வு பெற்ற ரவிவேலி அதிபர் பேசினார்.

இப்பகுதியில் 30 அல்லது 40 வருடங்களாக வெளையரும் குடியிருந்தார்கள் இரண்டு இனங்களுமே சேர்ந்தவர்களும் சகோதர, சகோதரிகளாக வே வாழ்ந்து வந்தனர்.

நான் செய்த பணிகளினால் இந்த உறவு முறை இறுக்கம் அடைந்தது.

தொழில் பெற்ற சிங்களவர் இப்பகுதிக்கு வந்த சமயம் அவர்கள் மனதில் பயமும் சந்தேகமும் தான் குடிகொண்டிருந்தன நான் அவர்களின் சந்தேகங்களை நீக்கி வந்தேன்.

தங்குவதற்கு நிரந்தர இடம் கிடைக்கும்வரை அவர்கள் விகாரையிலே தங்கி வந்தனர், சில தினங்களுக்குள் தமிழருடன் நட்புக் கொண்டு தங்கமிட வசதிகளை செய்து கொண்டனர் ஒரு தாயின் பிள்ளைகளைப்போல் அவர்கள் தமிழருடன் வாழ்ந்து வந்தனர்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிட ஆலோசனைகள்
0 கட்டிடப் படங்கள் கீறலும்
0 செலவு மதிப்பிடலும்
0 ஒப்பந்த அடிப்படையில் கட்டிடம் அமைக்கவும்
கலைத் தலைமையும் அனுபவமும் மிக்க எமது
பொறியியலாளர்களின் சேவையை நாடுமின்!
Dynamic Eng., Ltd.
476, பிரதான வீதி, கண்டுக்குளி
(செபற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

# உதயன்

08 05 1986 வியாழக்கிழமை

தொழிற்சாலைகளில்
இயந்திர சாதன பராமரிப்பு, திருத்த வேலைகள், புதிய இயந்திரங்களை படிமைத்தலும் உருவாக்குதலும்
ஆகியவற்றுக்கு அனுபவம் மிக்க எமது பொறியியலாளர்களின் சேவையை நாடுமின்!
Dynamic Eng, Ltd,
476 பிரதான வீதி, கண்டுக்குளி
(செபற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

# தமிழரின் நியாயமான அடிப்படைக் கோரிக்கைகளை இந்தியக் குழு வலியுறுத்தியது

## 'இந்து' நாளிதழில் ஜி. கே. ரெட்டி

புதுடில்லி, மே 7

தமிழரின் நியாயமான அடிப்படைக் கோரிக்கைகள் சம்பந்தமான இந்தியாவின் கருத்தை, இன்று அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான குழு இலங்கை அரசுக்கு வலியுறுத்திக் கூறிச்சென்றது.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது:-

சட்டம்—ஒழுங்கு, காணிக்குடியேற்றம் ஆகிய முக்கிய அம்சங்களில் காணப்பட்ட முன்னேற்றத்தை எழுத்து மூலம் பெற்றதில் இந்தியக்குழு வெற்றி கண்டுவிட்டது.

இந்த வெற்றியை சந்தேகத்துக்கு இடமில்லாமல் புதுடில்லி வட்டாரங்கள் வரவேற்கின்றன.

நியாயமான அடிப்படைக் கோரிக்கைகள் பற்றிய இந்தியாவின் கருத்தை இந்தியக்குழு, இலங்கை அரசுக்கு உணர்த்தி விட்டது.

இந்தியக் குழு இலங்கை அரசுடன் நடத்திய முதல் 3 நாள் பேச்சுக்கள் திருப்திகர நிலையில் நடந்தன காணப்பட்டன.

மூன்றாம் நாள் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதுதான் சற்று முன்னேற்றம் காணப்பட்டது.

எழுத்து மூலம் இலங்கை அரசு சமர்ப்பித்த கருத்துக்கள் இந்திய உயர் மட்டத்தினரால் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்து விட்டது. வடக்கு, கிழக்கு இணைப்புக்கு இலங்கை அரசு தயாரில்லை என்பதே அது.

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கிறார்.

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், மே 8

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பிரபாகரனும் அரசுடைய தோழர்களும் ஈரமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதல் ஒன்றிலிருந்தே எமது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என்று வெளியாகியுள்ள செய்திகள் தவறானவை. அத்தகைய சம்பவம் எதுவும் எமது முன்னணியில் நிகழவில்லை.

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

நவீன பிரசாரங்கள், வதந்திகளை இடைமறித்து மக்கள் விழிப்பாக இருக்க மாறும் வேண்டப்பட்டிருக்கிறது

## திருமலையில் இருவருக்கு மின்கம்பத்தண்டனை

திருகோணமலை, மே 8

கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருகோணமலை நகரில் இரண்டு பேருக்கு மின்கம்ப மரணதண்டனை விதிக்கப்பட்டது.

49 வயதான வி. சித்திரவேலாயுதம், 38 வயதான [illegible] ஆகிய இருவரின் சடலங்கள் நேற்றுக் காலை அன்புவழிபுரம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடங்கண்டுபிடிக்கப்பட்டன

காட்டிக் கொடுப்போருக்கு இதுதான் தண்டனை—என்று எழுதப்பட்ட அட்டைகளும் சடலங்களின் அருகில் காணப்பட்டன.

## பங்களாதேஷ் தேர்தலில் வன்செயல்கள்

டாக்கா, மே 7

பங்களாதேஷில் இன்று புதன்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெருமளவில் ஆள்மாறாட்டம், வன்செயல்கள் இடம்பெற்றன.

தலைநகர் டாக்காவில் இன்று முழுவதும் வெடிகுண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமாகவிருந்தது

அரச ஆதரவுக் கட்சியினால் தமது ஆதரவாளர்கள் 20பேர் கொல்லப்பட்டதாகவும் 500 பேர் வரை காயமடைந்ததாகவும் எதிரணி வேட்பாளர் ஹுஸைன் மொஹம்மத் எரிசாத் தெரிவித்தார்

# விளையாட்டரங்கு

## 15 பாடசாலைகள் பங்குபற்றும் மெய்வல்லுநர் போட்டிகள்

### வட்டுக்கோட்டையில் 14 ஆம் திகதி

வட்டுக்கோட்டை மே 8

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15 பாடசாலைகள் பங்குபற்றும் இப்போட்டி கொத்தணி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலையில் நடைபெறும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

வட்டுக்கோட்டையிலுள்ள 15 பாடசாலைகள் கொத்தணி அமைப்புக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் முதன் முதலாக நடைபெறும் இப்போட்டியை மிகச் சிறந்த முறையில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் போட்டி அமுலாளர் செய்து வருகின்றனர்.

## தந்தை செல்வா நினைவுக் கேடய கரபந்தாட்டம்

சாவகச்சேரி மே. 8

தந்தை செல்வா நினைவுக்கேடய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்றுச் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகின்றன.

அறவழிப் போராட்டக் குழுவினரால் நாடு முழுவதிலுமுள்ள மாவட்டரீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கரபந்தாட்டப் போட்டியில் 24 கரபந்தாட்டக் குழுவினர் பங்குபற்றுகின்றனர்.

நுணாவில் மேற்கு விளையாட்டரங்கில் தொடர்ந்து நடைபெறும் இப்போட்டியில் இறுதி ஆட்டங்கள் இம்மாதம் 24தாம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## வடக்கில் தாச்சிப் போட்டி

சாவகச்சேரி, மே 8

சர்வதேச சமாதான ஆண்டுக் கேடயத்துக்கான தாச்சிப் போட்டி கடந்த மாவட்டரீதியில் நடந்த சர்வதேச சமாதான சபையின் வடமாகாணக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

ஆண், பெண் இருபாலாருக்கும் தனித் தனியாக நடத்தப்படும் இத்தாச்சிப் போட்டிகள் சாவகச்சேரியில் அந்த மாதமுதற் பகுதியில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## கொழும்பு பாதுகாப்பானது என வெளிநாட்டில் செய்த தவிடு பொடியானது

### உல்லாசப் பிரயாணத்துறை தலைவர் கவலைப்படுகிறார்

கொழும்பு, மே 8

கொழும்பு பாதுகாப்பானது [illegible] வடக்கு-கிழக்கில் நாள்—இடி நாம் வெளி நாட்டு உல்லாசப் பிரயாணத்துறை வட்டாரங்களில் செய்து வந்த பிரசாரம் எல்லாம் கட்டுநாயக்கா குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் தவிடு பொடியாகிவிட்டது

இப்படி இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. எச். பி. சிரிசேனா [illegible] தெரிவித்தார்.

1983 வன்செயலைத் தொடர்ந்த 1986 ஆரம்பத்தில் [illegible] பிரயாணத்துறை ஓரளவு அபிவிருத்தி அடையத் தொடங்கியது. ஆனால் கட்டுநாயக்கா விமானத் தளர்ப்பச் சம்பவம் தரிஷ் [illegible] ஒன்று இனி உல்லாசப் பிரயாணத் துறை வளர்ச்சி பற்றி ஒன்றுமே சொல்ல முடியாதுள்ளது—இப்படி உல்லாசப் பிரயாணத்துறை [illegible] சங்கத் தலைவர் திரு. எச். பி. சிரிசேனா தெரிவித்தார்.

## மகிழுகராசா நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், மே 8

இலங்கை அன்னை நிமு.க தலைவர் பொன் மகிழுகராசா நேற்று நண்பகல் விடுவிக்கப்பட்டார்.

இன்ற தேர்தோர் அவரை வாள் ஒன்றில் கொண்டு வந்த அவரது தாவடி இல்லத்தில் விட்டுச் சென்றனர்

## மத்திய தந்திக் கூந்தோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லம் 'பிளி'யாக இயக்கத் தொடங்கியது

மக்கள் உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாக இருந்தனர்.

உள்ளிருந்த தொலைவெளி அறைக் கூண்டுக்குள்ளும் போய் பலர் தொலைபேசி அழைப்புக்களைப் பெசிவிட்டு வந்தனர்.

### பயங்கர சத்தம்

திடீரென்று பயங்கர வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. குய்யோ முறையோ என்று பொது மக்கள் மாய்ந்து சென்றனர். அலுவலகம் உள்ளே ஒரே புகை மண்டலம். மரப்பலகையினால் மாடித்தடுப்புகள் எரிந்து போயின. சம்பவத்தின் பின்னர் அலுவலகத்தில் வேலைக்கடிகாரம் 9-18 நேரத்தைக் காட்டியவாறு விழுந்து கிடந்தது.

### அலறியவாறு ஓடினர்

வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து கற்றுப்புறக் கட்டடங்களில் இருந்தவர்கள் அலறியவாறு வெளியே ஓடினர்.

அலுவலக வெளிக்கட்டடம் பார்வைக்கு அப்படியே காட்சியளிக்கிறது. உட்புறத்திலிருந்தான் சேதம் ஏற்பட்டது

பாதுகாப்புப் படையினர் அந்த இடத்துக்கு விரைந்து மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

மொத்தம் 11 பேரின் சடலங்கள் நேற்றுப் பிற்பகல் வரை மீட்கப்பட்டுள்ளன. அவர்களில் இரண்டுபேர் பெண்கள். அவர்களில் ஒரு பெண், அமைச்சு அதிகாரி ஒருவரின் மனைவி என்று உறுப்படுகிறது

காயமுற்ற 114 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர். அவர்களில் 20 பேரின் நிலை கவலைக்கிடமென அறிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் சுமார் 23 பேர் பெண்கள்

### இரண்டு பார்சல் குண்டுகள்

இரண்டு குண்டுப் பார்சல்கள் அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தனவாம்.

ஒரு பார்சல் உள்ளே டெலிபோன் கூண்டு அறைக்குள்ளும் மற்றப் பார்சல் அலுவலகத்திற்கு வெளிப்புறமும் வைக்கப்பட்டிருந்தனவாம்

வெளிப்பக்கம் வைக்கப்பட்டிருந்த குண்டுப் பார்சல் வெடித்ததில் பெரிய தாகச் சேதம் ஏற்படவில்லை

உள்ளுக்குள் வைக்கப்பட்ட பார்சல் குண்டு வெடித்ததே பெரிய சேதத்தை விளைவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாகனங்கள் சேதனை

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து வெளிக்கள் கார்கள் உட்பட சகல வாகனங்களும் பலவிதமாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டன

ஒரு கொறியில் நிறுத்தப்பட்ட கார்கள் அடுத்தே வைக்கப்பட்டு இருந்தன பாதுகாப்புப் படையினர் லொறியை மறித்து, ஒவ்வொரு முடைகளாக இறக்குவித்து சோதனையிட்டனர்.

### போக்குவரத்து நெருக்கடி

பதற்றம் காரணமாக நேற்றுக் கொழுப்பு மாநகரம் போக்குவரத்து நெருக்கடிக்கு உள்ளானது

கோட்டை யில் இருந்து கொள்ளுப்பிட்டிக்குச் செல்ல அரை மணித்தியாலத்துக்குமேல் பிடித்தது

### அதிகாரிகள்

சம்பவம் நடந்த இடத்துக்கு பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் உடனடியாக விரைந்து சென்றனர்.

நேற்றைய குண்டு வெடிப்பின்போது எழுந்த சத்தத்தைப்போல ஒரு குண்டுச் சத்தத்தை நாம் வாழ்க்கையில் கேட்கவில்லை என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

குண்டுவெடிப்பால் கொழும்பு கோட்டைப் பகுதியே அதிர்ந்தது

குண்டு வெடிப்பால் ஆங்கே இருந்த தபால் தந்தி அமைச்சு அலுவலகத்தில் கண்ணாடிகள் நொறுங்கின. இராணுவ அமைச்சு அலுவலகம், [illegible] அலுவலகம் [illegible] மற்றும் [illegible] நிலைக் கட்டடங்கள் அதிர்ந்தன.

### மாணிக்கம் கைது

இந்தச் சம்பவம் தொடர்பாக மாணிக்கராசாவச் சேர்ந்த மாணிக்கம் என்பவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.

## பாதுகாப்பு செலவுக்கு மேலும் நிதி

கொழும்பு, மே 8

இலங்கையின் இந்த வருட பாதுகாப்புச் செலவினங்களுக்காக மேலும் 13 கோடி 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது

இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியது.

## சிப்பாய்கள் - போராளிகள் ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்தது என்று கூறப்படுகிறது எனினும் சிப்பாய்கள் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் பற்றித் தகவல் இல்லை.

தமிழ் ஈழ இராணுவத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் இந்த மோதல் சம்பவங்களில் போது உயிரிழந்ததாக அறியப்படுகிறது.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

1. ஜெகன் (மாஸ்டர்), ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர் வயது 26.
2. கணேஷ். வயது 21. திருகோணமலையைச் சேர்ந்தவர்.
3. சண்முகதாஸன். வயது 23 திருகோணமலையைச் சேர்ந்தவர்.
4. கபாஸ் (இடி அமீன்) வயது 23 இவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்.

இச்சம்பவங்களை அடுத்து கோட்டைக்குத் திரும்பிய சிப்பாய்கள் குடியிருப்புகள், கடைகள் இருந்த பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

கோட்டை, கண்ணா, [illegible] மவுண்டாரவீதி, [illegible] ஆகிய பகுதிகளில் வீடுகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

தகர்க்குவிக்கு விளைவாக பொதுமக்கள் முன்று பேர் மரணமானார்கள். பண்ணைப் பக்கமாக வந்த லொறி ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்திலேயே அவர்கள் மரணமானார்கள்.

லொறியும் சேதம் அடைந்தது

குருநகர் மவுண்டாரவீதி ரோடில் உள்ள இரண்டு வீடுகளில் ஷெல் விழுந்து வெடித்ததனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

வீட்டினுள் இருந்த டி. வி., டெக் மற்றும் சில பொருள்கள் சேதமடைந்தன.

யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் ஷெல் விழுந்ததனால் ஐந்தக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நான்கு கடைகள் சேதமடைந்தன.

இச்சம்பவங்களை அடுத்து நகரில் பதற்றம் நிலவியது. மக்கள் நாலா புறமும்திசைதி ஓடினார்கள்.

யாழ் அஞ்சல் நிலையமும் மேற்கு அரை நேரத்துடன் மூடப்பட்டு ஊழியர்கள் வெளியேறினர். வங்கிகளும் நேரகாலத்துடன் மூடப்பட்டன.

# இலங்கைத்தமிழ் அகதிகளை திரும்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்த மாட்டோம்

## பகத் சபையில் அறிவிப்பு

புதுடில்லி, மே 7

இலங்கையில் தமிழர் பகுதியாக, கண்ணியமாக, பாதுகாப்பான வாழும் சூழ்நிலை ஏற்படும் வரை தமிழ் அகதிகளை திரும்பிச் செல்ல வேண்டும் என்று இந்திய அரசு கட்டாயப்படுத்காது.

இப்படி வெளிநாட்டமைச்சர் விராம் பகத் புதுடில்லி நாடாளுமன்றக் கட்டத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் பகத் மேலும்சொன்னதாவது:-

இலங்கையில் வன்முறைகள், பாதுகாப்பற்ற நிலைமைக் நிலவுவதுதான் தமிழ் அகதிகள் திரும்பிச் செல்ல தடையாக உள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளை ஐ. நா. அகதிகள் ஆணையத்துப் பராமரிக்க ஐ. நா. அகதிகள் தூதுவராலயத்தின் உதவியை இந்தியா நாடாது

ஐ. நா. அகதிகள் நிறுவன உதவியை ஆப்கான் அகதிகள் நாடினர் ஆனால் அதனால் பயன் ஏற்படவில்லை இப்படி அமைச்சர் பகத் சொன்னார்.

இனி அமைச்சர் சோ

## காயமடை ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வித்

ஆர். ஜேராஜ் (28 வயது) ஒட்டுடடம்.

றெ காந்தராஜன் (18 வயது பண்ணை

வைத்தி செல்வம் (28 வயது) பாலையூர்.

இரத்தினம் கனகசெல்வன் (19 வயது) மண்டை தீவு

பொன்னுத்துரை ரஞ்சன் (21 வயது) இணுவில்.

பாலசிங்கம் ராசதுரை (30 வயது) புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரம்.

முகமட் அப்துல் காதர் நஜீம் (32 வயது) சோனகத்தெரு.

முருகேசு விமலராஜ் (33 வயது) புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரம்.

இவர்கள் அனைவரும் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த வேறு சிலர் தனியார் வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

## கிண்ணியா விரைந்தார் மஹ்ரூப்

திருகோணமலை மே. 8

விசேஷ விமானத்தில் கொழும்பில் இருந்து நேற்று கிண்ணியாவுக்கு வந்து சேர்ந்தார் முதுர் எம். பியூ. மஹ்ரூப் மரவிடட அமைச்சரு மான ஜனாப் எம். ஸ. எச். மஹ்ரூப்.

[illegible] கிண்ணியாவில் நடந்த தாக்குதல் சம்பவங்கள் பற்றிய தகவல் கிடைத்தே ஜனாப். மஹ்ரூப் கிண்ணியா வந்தார்.

இதனால் கிண்ணியாவில் பதற்றநிலை நீங்கியது.

நேற்றுவழமைபோன்று முஸ்லிம் பெண்கள் திருமலைநகர் வந்து அலுவலகத்தில் கடமையாற்றினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கிளையகத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வெளியீட்டு திகதி: 08 - 05 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) LTD; 15, Second Lane, Power House Road, Jaffna.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, Under Number Q J 60 N 86

## லொறியின் முன்,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின் முன்பக்கத்தில் இருந்தோம்.

எமது லொறி பண்ணையை அண்மித்ததும் கோட்டைப் பக்கமாக இருந்து துப்பாக்கிச் சூடுகள் பறந்து வந்தன

லொறியின் கண்ணாடியை உடைத்து வந்த குண்டு எனது கையை முதலில் தாக்கியது.

அதனை அடுத்து லொறி உரிமையாளர் சிவபாதசுந்தரத்தையும், மற்றைய கலியாட்களான சுந்தரையா, பாஸ்கரன் ஆகியோரையும் குண்டுகள் தாக்கின.

முன்னால் இருந்த மூவரும் இரத்தம் பீறிட்ட நிலையில் லொறியினுள் துடித்துக்கொண்டிருந்தனர்.

நான் லொறியை விட்டு வெளிய பாய்ந்து கடலுக்குள்ளால் நீந்தி, ஒரு வீட்டை அடைந்தேன்

பின்னர் கார் ஒன்றில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டேன்.

என்னுடன் முன்னால் இருந்துவந்த மூவரும் இறந்துவிட்டார்கள் என பின்னர் அறிந்தேன்.

இப்படி அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org